# காவல் துறைக்கான அறிவிப்புகள்

## I. காவல் துறை குடியிருப்புகள் கட்டுதல்

1. திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் 32 காவலர் குடியிருப்புகள், தளியில் 2 சார்பு ஆய்வாளர் குடியிருப்புகள் மற்றும் 28 காவலர் குடியிருப்புகள் ஆகியன 9 கோடியே 22 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

2. தஞ்சாவூர் இருப்புப் பாதை காவல் நிலைய ஆய்வாளர் குடியிருப்பு ஒன்று, 2 சார்பு ஆய்வாளர் குடியிருப்புகள் மற்றும் 40 காவலர் குடியிருப்புகள் ஆகியன 6 கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

3. கடலூர் மாவட்டம், ஆயுதப்படை வளாகத்தில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர் குடியிருப்புகள், 6 காவல் துணை கண்காணிப்பாளர் குடியிருப்புகள் மற்றும் 16 ஆய்வாளர் குடியிருப்புகள் ஆகியன 5 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

4. சென்னை மாநகரம் புதுப்பேட்டையில் உள்ள குதிரைப்படை வளாகத்தில் 16 காவலர் குடியிருப்புகள் மற்றும் சிந்தாதிரிப்பேட்டையில் 16 காவலர் குடியிருப்புகள் ஆகியன 4 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

5. கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பத்தில் உள்ள நடுவீரப்பட்டு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குடியிருப்பு ஒன்று மற்றும் 23 காவலர் குடியிருப்புகள் ஆகியன 3 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

6. ஈரோடு இருப்புப் பாதை காவல் நிலைய காவலர்களுக்கு 23 குடியிருப்புகள் 3 கோடியே 51 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

7. திருநெல்வேலி மாவட்டம், இலத்தூர் காவல் நிலைய காவலர்களுக்கு 18 குடியிருப்புகள், 2 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

8. கோயம்புத்தூர் மாவட்டம் கோவில்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் துறையினருக்கான ஆய்வாளர் குடியிருப்பு ஒன்று, 2 சார்பு ஆய்வாளர் குடியிருப்புகள்; மற்றும் 12 காவலர் குடியிருப்புகள் ஆகியன 2 கோடியே 36 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

9. ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகர காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குடியிருப்பு ஒன்று மற்றும் 4 காவலர் குடியிருப்புகள் ஆகியன 83 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

10. மதுரை மாநகர போக்குவரத்துக் காவல் துணை ஆணையருக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு 69 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

11. ஈரோடு மாவட்டம், அரச்சலூர் காவல் நிலைய ஆய்வாளர் குடியிருப்பு 38 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

## II. <u>காவல் துறை பணியாளர்கள் விரைந்து பயணம் செய்ய ஏதுவாக புதிய வாகனங்கள் வழங்குதல்.</u>

12. காவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சிறப்பாக பணிபுரிய ஏதுவாக 65 லட்சம் ரூபாய் செலவில் 5 சிற்றுந்துகள் புதிதாக வாங்கி வழங்கப்படும்.

13. காவலர்கள் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை விரைந்து சென்று கட்டுப்படுத்த ஏதுவாக 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 5 பேருந்துகள் புதிதாக வாங்கி வழங்கப்படும்.

14. காவலர்கள் விரைந்து சென்று குற்றங்களை தடுக்க ஏதுவாக 7 கோடியே 41 லட்சம் ரூபாய் செலவில் 78 ஜீப்புகள் புதிதாக வாங்கி வழங்கப்படும்.

15. காவலர்கள் ரோந்துப் பணியை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டு 90 காவல் நிலையங்களுக்கு 2 கோடியே 48 லட்சம் ரூபாய் செலவில் 330 மோட்டார் சைக்கிள்கள் வாங்கி வழங்கப்படும்.

## III. <u>சட்டம் ஒழுங்கை சிறப்பாக பராமரிக்க காவல் நிலையங்களுக்கு புதிய சாதனங்களின் தொகுப்பு வழங்குதல்</u>

16. சட்டம் ஒழுங்கை சிறப்பாக பராமரிக்கும் வகையில் 90 காவல் நிலையங்களுக்கு 9 கோடியே 41 லட்சம் ரூபாய் செலவில், 32 சாதனங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும்.

## IV. <u>காவல் துறை அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ஊர்க் காவல் படைப் பிரிவிற்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல்</u>

17. தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஆயுதப் படை வளாகத்தில் நிருவாக அலுவலகத்திற்கு என்று தனியாகக் கட்டடம் இல்லாததால் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

18. நிருவாக வசதியைக் கருத்தில் கொண்டு தற்பொழுது திருச்சி மாநகரில் வெவ்வேறு இடங்களில் இயங்கி வரும் 5 காவல் உதவி ஆணையர்களுக்காக ஒரே இடத்தில் 2 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் அலுவலகங்கள் கட்டப்படும்.

19. தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகக் கட்டடத்தில் இடப் பற்றாக்குறையை களையும் வகையில் 2 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவில் தற்போதுள்ள கட்டடத்தில் இரண்டாம் தளம் கட்டப்படும்.

20. ஈரோடு மாவட்டம், சின்ன சடையம் பாளையம் கிராமத்தில் ஈரோடு நகர போக்குவரத்து காவல் துணைக் கண்காணிப்பாளர் குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் 59 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

21. வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டையில் காவல் துணைக் கண்காணிப்பாளர் குடியிருப்பு மற்றும், முகாம் அலுவலகம் 45 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

22. அரியலூர் மாவட்ட காவல் மோப்ப நாய்ப் படை பிரிவிற்கு 44 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படும்.

23. தஞ்சாவூர் மாவட்ட ஊர்க் காவல் படை அலுவலகம் தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், இப்பிரிவிற்கு 29 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

## V. <u>கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளைச் சிறப்புற மேற்கொள்ளவும் காவல் துறை பணியாளர்களின் பாதுகாப்பிற்காகவும் நவீன சாதனங்கள் வழங்குதல்</u>

24. காவலர்கள் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் போது, தரையில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மின்னணு சாதனங்களை கண்டுபிடிக்க ஏதுவாக 35 லட்சம் ரூபாய் செலவில் 5 நேரியல் அல்லாத சந்தி கண்டுபிடிக்கும் கருவிகள் அதாவது Non Linear Junction Detectors வாங்கி வழங்கப்படும்.

25. அதிமுக்கிய நபர்களின் வருகை மற்றும் முக்கிய பொது நிகழ்வுகளின் பாதுகாப்பு சோதனையின் போது வெடி மருந்துகள் சம்பந்தப்பட்ட பொருட்களை கண்டறிய 1 கோடி ரூபாய் செலவில் 5 வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் கருவிகள் அதாவது Explosive Vapour Detectors வாங்கி வழங்கப்படும்.

26. கண்காணிப்பு பணிகளின் போது சந்தேகத்திற்கு இடமான, பிரித்துப் பார்க்க இயலாத நிலையில் உள்ள பொருளின் உட்புற நிலையை கண்டறிய ஏதுவாக காவல் துறைக்கு 74 லட்சம் ரூபாய் செலவில் 4 ஊடு கதிர் மூலம் கண்டறியும் கருவிகள் அதாவது X-Ray Baggage Scanners வாங்கி வழங்கப்படும்.

27. கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளும் போது பூமிக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடிய பொருட்களை கண்டறிய ஏதுவாக 18 லட்சம் ரூபாய் செலவில், ஆழமாக புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை கண்டுபிடிக்கும் கருவிகள், அதாவது Deep Search Mine Detectors 4 வாங்கி வழங்கப்படும்.

**28.** காவல் துறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான நவீன பாதுகாப்பு உபகரணங்களின் தேவை அவசியம் ஆவதால் **25** லட்சம் ரூபாய் செலவில் **5** பன்முக வாசற்படி உலோக கண்டுபிடிப்பிற்கான கருவிகள் அதாவது Multi Zone Door Frame Metal Detectors வாங்கி வழங்கப்படும்.

**29.** பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவலர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு **90** லட்சம் ரூபாய் செலவில் **150** குண்டு துளைக்காத பொதியுறைகள் அதாவது Bullet Proof Jackets வாங்கி வழங்கப்படும்.

**30.** சட்டம் ஒழுங்கு மற்றும் தீவிரவாத நிகழ்வுகள் போன்ற சம்பவங்களின் போது பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவலர்களின் பாதுகாப்பிற்காக **45** லட்சம் ரூபாய் செலவில் **150** குண்டு துளைக்காத தலைக் கவசங்கள் அதாவது Bullet Proof Helmets வாங்கி வழங்கப்படும்.

**31.** குற்ற நிகழ்வுகளில் ஈடுபடும் குற்றவாளிகளை விசாரணை செய்யும் போது அவர்களின் குரலை பதிவு செய்ய ஏதுவாக **3** லட்சம் ரூபாய் செலவில் **25** எண்ம முறை குரல் பதிவு சாதனங்கள் அதாவது Digital Voice Recorders வாங்கி வழங்கப்படும்.

**32.** இரவு நேர ரோந்து மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவலர்கள் சிறப்பாக பணியாற்ற, **30** லட்சம் ரூபாய் செலவில் **5** மூன்றாம் தலைமுறை இரவு நேர கண்காணிப்பு தொலைநோக்கு கருவிகள் அதாவது Night Vision Binoculars (Generation-3) வாங்கி வழங்கப்படும்.

**33.** கடலோர பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவலர்கள் பணியின் போது தண்ணீரில் மூழ்கி விடாமல் அவர்களை பாதுகாக்கும் பொருட்டு **5** லட்சம் ரூபாய் செலவில் **195** உயிர்காப்பு பொதியுறைகள் அதாவது Life Jackets வாங்கி வழங்கப்படும்.

**34.** வெடிகுண்டுகளை செயலிழக்க செய்யும் நிகழ்வுகளில் ஈடுபடும் நிபுணர்களின் பாதுகாப்பிற்காக **60** லட்சம் ரூபாய் செலவில், **3** வெடி குண்டுகளை செயலிழக்கச் செய்யும் போது அணியும் உடைகள் அதாவது Bomb Suits வாங்கி வழங்கப்படும்.

**35.** சட்டம் ஒழுங்கு பிரச்சனை மற்றும் கலவரங்களைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபடும் காவலர்களை பாதுகாக்கும் பொருட்டு **20** லட்சம் ரூபாய் செலவில் **1,000** உடற் கவசங்கள் அதாவது RIOT Equipment - Body Protectors வாங்கி வழங்கப்படும்.

**36.** சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவல் துறையினரை கலவரக்காரர்களிடம் இருந்து பாதுகாக்கும் பொருட்டு 18 லட்சம் ரூபாய் செலவில் 1,000 பாலி கார்பனேட் கேடயங்கள், அதாவது RIOT Equipment – Poly Carbonate Shields வாங்கி வழங்கப்படும்.

**37.** அமைதியை நிலைநாட்ட, சட்ட விரோதமான கூட்டங்களை கலைப்பதற்காக, பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவலர்களுக்கு 7 லட்சம் ரூபாய் செலவில் 1,000 பாலி கார்பனேட் லத்திகள் அதாவது RIOT Equipment – Poly Carbonate Lathi வாங்கி வழங்கப்படும்.

**38.** கலவரக்காரர்களை கட்டுப்படுத்தும் போது ஏற்படும் கல்வீச்சிலிருந்து காவல் துறையினரை பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்கு 12 லட்சம் ரூபாய் செலவில் 1,000 தலைக் கவசங்கள் அதாவது, RIOT Equipment – Fibre Reinforced Plastic (FRP) Helmets வாங்கி வழங்கப்படும்.

**39.** இரவு நேர காவல் பணியில் ஈடுபடும் காவல் துறையினருக்கு குறைந்த அளவு மின்சாரத்தில் அதிக ஒளி தரக் கூடிய 104 டார்ச் விளக்குகள் அதாவது Light Emitting Diode (LED) Torch Lights, 5 லட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும்.

**40.** தூரத்தில் இருந்து வானொலி அலைகள் மூலம் இயக்கக் கூடிய வெடிகுண்டுகளை செயல் இழக்க செய்யும் இரண்டு எண்ணிக்கை மேம்படுத்தப்பட்ட இலகுவாக எடுத்துச் செல்லத் தக்க JAMMER சாதனங்கள் அதாவது Mobile / Remote Controlled Improvised Explosive Devices, Portable Jammer, 5 லட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும்.

**41.** முக்கியமான குற்ற நிகழ்வுகளில் தொடர்புடைய ஆவணங்களை நகல் எடுப்பதற்கு வசதியாக 1 லட்சம் ரூபாய் செலவில் 2 எண்ணிக்கை இலகுவாக எடுத்துச் செல்லத் தக்க ஆவண ஸ்கேனர்கள் அதாவது Portable Document Scanners வாங்கி வழங்கப்படும்.

**42.** குற்ற வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளை விசாரணை செய்யும் போது அவர்களின் குரலை பதிவு செய்ய 1 லட்சம் ரூபாய் செலவில் 2 எண்ணிக்கை சிறிய எண்ம முறை குரல் பதிவு சாதனங்கள் அதாவது Mini Digital Voice Recorders வாங்கி வழங்கப்படும்.

## VI. காவல் நிலையக் கட்டடங்கள் கட்டுதல்

43. சென்னை மாநகரத்திலுள்ள வி–7, நொளம்பூர் காவல் நிலையம் தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், இக்காவல் நிலையத்திற்கு முகப்பேரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம், 5 கோடியே 14 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, 1 கோடியே 81 லட்சம் ரூபாய் செலவில் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய கட்டடம் கட்டப்படும்.

44. சென்னை, செம்மஞ்சேரி (J–10) காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லாததால், அக்காவல் நிலையத்திற்கு 1 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படும்.

45. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சதுரங்கப்பட்டினம் காவல் நிலையம் பழைய கட்டடத்தில் இயங்கி வருவதால், அக்காவல் நிலையத்திற்கு, 1 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படும்.

46. திருச்சி மாவட்டம், ஜீயபுரம் போக்குவரத்துக் காவல் நிலையத்திற்குத் தனியாகக் கட்டடம் இல்லாததால், அக்காவல் நிலையத்திற்கு 58 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படும்.

## VII. 10 எல்லையோர மாவட்டங்களில் நக்சலைட் தடுப்பு சிறப்பு பணிப் பிரிவுகள் உருவாக்குதல்

47. திருவள்ளூர், வேலூர், ஈரோடு, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய, எல்லையோர மாவட்டங்களில் 10 நக்சலைட் தடுப்பு சிறப்பு பணிப் பிரிவுகள் 9 கோடியே 48 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

## VIII. காவல் நிலையங்களுக்கு இணையதள முறைமை கேமராவுடன் கூடிய கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்கள் வழங்குதல்

48. 263 காவல் நிலையங்களுக்கு 6 கோடியே 31 லட்சம் ரூபாய் செலவில் இணைய தள முறைமை கேமராவுடன் கூடிய கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்கள் அதாவது closed circuit television with internet protocol cameras வாங்கி வழங்கப்படும்.

## IX. மாவட்ட காவல் / மாநகர காவல் பிரிவுகளுக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்குதல்

49. காவல் துறையின் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த 1 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் 307 மிக உயர் அலை நிலைக் கருவிகள் அதாவது, Very High Frequency Static sets வாங்கி வழங்கப்படும்.

50. காவல் துறையின் தகவல் தொடர்பு பரிமாற்றத்திற்கென 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 500 மிக உயர் அலை நகரும் கருவிகள் அதாவது, Very High Frequency Mobile sets வாங்கி வழங்கப்படும்.

51. காவல் துறையினர் துரிதமான தகவல் தொடர்பு மூலம் குற்ற நிகழ்வுகளை தடுப்பதற்கு வசதியாக 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 500 மிக உயர் அலை கையடக்க கருவிகள் அதாவது, Very High Frequency Handheld sets வாங்கி வழங்கப்படும்.

52. விரைவான தகவல் பரிமாற்றத்திற்காக 45 லட்சம் ரூபாய் செலவில் 10 மிக உயர் அலை மறு அஞ்சல் கருவிகள் அதாவது, Very High Frequency Repeater sets வழங்கப்படும்.

## X. காவல் துறை சிறப்புப் பிரிவுகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

53. தேனி மாவட்டத்தில் இயங்கி வரும் 'க்யூ' பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் இப்பிரிவிற்கு 1 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

54. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் 'க்யூ' பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் இப்பிரிவிற்கு 89 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

55. தஞ்சாவூர் மாவட்டத்தில் இயங்கி வரும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம், தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் இப்பிரிவிற்கு 76 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

56. புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் 'க்யூ' பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் இப்பிரிவிற்கு 68 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

57. திருவாரூர் மாவட்டத்தில், தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகத்திற்கு தனியாகக் கட்டடம் இல்லாததால் 43 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படும்.

58. பெரம்பலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் இப்பிரிவிற்கு 40 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

59. நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயங்கி வரும் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம் பழைய அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் இப்பிரிவிற்கு 40 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

## XI. <u>காவல் துறையின் பல்வேறு அலுவலகங்கள், காவல் நிலையங்கள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் சாலை வசதி செய்தல்</u>

60. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஆயுதப்படை வளாகத்தை பாதுகாக்கும் பொருட்டு, ஆயுதப்படை வளாகத்தினைச் சுற்றி 1 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவில் காப்பு அறையுடன் கூடிய சுற்றுச் சுவர் கட்டப்படும்.

61. கோவை மாவட்டம், கோவைப்புதூரில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் 4–ஆம் அணி வளாகத்தின் தென்பகுதி மற்றும் கிழக்கு, மேற்கு எல்லைக் கோட்டின் ஒரு பகுதி ஆகியவற்றில் 47 லட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

62. சேலம் மாவட்டம், கருமலைக் கூடல் காவல் நிலைய காவலர் குடியிருப்புகளைச் சுற்றி 42 லட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்புச் சுவர் கட்டப்படும்.

63. விழுப்புரம் மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் உள்ள அலுவலகம், ஆயுதக் கிடங்கு, காவலர் குடியிருப்புகள் மற்றும் ஆயுதப் படைப் பயிற்சி மைதானம் ஆகியவற்றின் பாதுகாப்புக் கருதி, 32 லட்சம் ரூபாய் செலவில், சுற்றுச்சுவர் கட்டப்படும்.

64. சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை வளாகம் அமைந்துள்ள இடத்தினை பாதுகாக்க 31 லட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

65. தஞ்சாவூர் மாவட்ட ஆயுதப்படை காவலர் குடியிருப்புகளுக்கு 22 லட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

66. சென்னை ஆவடி, சத்தியமூர்த்தி நகரில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் 2–ஆம் அணியில், காவல் அதிகாரிகள் மற்றும் காவலர் குடியிருப்புகளுக்கான சாலை பயனற்ற நிலையில் உள்ளதால், 20 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக கான்கிரீட் சாலை அமைக்கப்படும்.

67. நாமக்கல் மாவட்டம், வேல கவுண்டம்பட்டி காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்புகளைச் சுற்றி 13 லட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்புச் சுவர் கட்டப்படும்.

68. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் காவல் கண்காணிப்பாளர் குடியிருப்புக்கு 11 லட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

69. நாமக்கல் மாவட்டம், பேளுக்குறிச்சி காவல் நிலையத்திற்கு 8 லட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

70. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகியவற்றின் பாதுகாப்பு கருதி 7 லட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

71. விருதுநகர் மாவட்டம், திருச்சுழி காவல் நிலையத்திற்கு ஆழ் துளைக் கிணறு அமைத்தல், வடக்கு மற்றும் மேற்கு பகுதியில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகியன 6 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## XII. புதிய போக்குவரத்து காவல் நிலையங்கள் உருவாக்குதல்

72. தருமபுரி மாவட்டத்தில் உள்ள அரூர் மற்றும் பென்னாகரம் ஆகிய இரண்டு இடங்களில் நிலவும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கவும், போக்குவரத்து தொடர்பான காவல் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும், மேற்கண்ட இடங்களில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில், இரண்டு புதிய போக்குவரத்து காவல் நிலையங்கள் உருவாக்கப்படும்.

73. நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணியில் நிலவும் போக்குவரத்து நெரிசலை சரி செய்யவும், போக்குவரத்து தொடர்பான காவல் பணிகளை செம்மையாக மேற்கொள்ளவும், மேற்கண்ட இடத்தில் 88 லட்சம் ரூபாய் செலவில் புதிய போக்குவரத்து காவல் நிலையம் உருவாக்கப்படும்.

## XIII. தடய அறிவியல் துறையின் சிறப்பான செயல்பாட்டிற்கு தேவையான நவீன உபகரணங்கள் வழங்குதல்

74. தடய அறிவியல் மூலம் குற்ற நிகழ்வு இடத்தில் இருந்து சேகரிக்கப்படும் தடய பொருட்களில் உள்ள உலோகங்களின் விகிதாச்சாரத்தை துல்லியமாக விரைவில் கண்டறிவதற்காக 25 லட்சம் ரூபாய் செலவில் எடுத்துச் செல்லத் தக்க அளவிலான, ஊடு கதிர் உடன் ஒளிர்வு பகுப்பி அதாவது Benchtop X-Ray Fluorescence (XRF) Analyser வாங்கி வழங்கப்படும்.

75. வெடிபொருள் வெடித்த குற்ற நிகழ்வுகளில் சேகரிக்கப்படும் மாதிரிகளைக் கொண்டு அவ்விடங்களில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருள் சாதனத்தை அறுதியிட்டு கண்டறிவதற்காக 50 லட்சம் ரூபாய் செலவில் அயனி அலகிடும் கருவி அதாவது Ion Scan வாங்கி வழங்கப்படும்.

76. ஆள் கடத்தல், கொலை மிரட்டல், ஆபாச பேச்சு, தீவிரவாத நடவடிக்கை போன்ற குற்றங்களில் சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய உரையாடல்களில் பேசிய நபர்களை அடையாளம் காண்பதற்காக, 11 லட்சம் ரூபாய் செலவில் தடய குரலியல் ஆய்வகம் அதாவது Speech Science Lab-Forensic (SSL-F) ஏற்படுத்தப்படும்.

77. குற்ற நிகழ்விடங்களில் காணப்படும் அடையாளம் தெரியாத மற்றும் உரிமை கோரப்படாத சடலங்களின் எலும்புகளை மரபணு சோதனை செய்ய அவற்றை பாதுகாப்பாக வைப்பதற்கு 34 லட்சம் ரூபாய் செலவில் தக்க இடத்தில் அமைத்துக் கொள்ளக் கூடிய 2 குளிர்பதன அறை (–20 டிகிரி செல்சியஸ்) அதாவது Makeshift cold room (-20 degree Celsius) வழங்கப்படும்.

78. குற்ற நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட போதை மருந்து, எளிதில் ஆவியாகக் கூடிய, கரிமப்பொருட்கள், விஷப் பொருட்கள் ஆகியவற்றை துல்லியமாக கண்டறிவதற்காக 65 லட்சம் ரூபாய் செலவில் வாயு நிறவியல் – நிறைமானி அதாவது Gas Chromatograph – Mass Spectrometer வழங்கப்படும்.

79. தடய அறிவியல் துறை தலைமை ஆய்வகத்தின் 15 பகுப்பாய்வு பிரிவுகளையும் கண்காணிக்க தேவைப்படும் 18 மின்னணு நுண் கண்காணிப்பு சாதனங்கள் அதாவது Electronic Surveillance and Monitoring Devices 12 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## XIV. <u>சிறப்பு இலக்குப் படை பிரிவிற்கு தேவையான இலக்க முறை வரை படிவ மென்பொருள் வழங்குதல்</u>

80. ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் சிறப்பு இலக்குப்படை பிரிவிற்கு தேவையான இலக்க முறை வரை படிவம் மென்பொருள் அதாவது, Digital Mapping Software வாங்குவதற்கும், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இதனை முன்னோடித் திட்டமாக செயல்படுத்துவதற்கும் 80 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## XV. <u>ஊர்க்காவல் படையை பலப்படுத்துதல்</u>

81. ஊர்க்காவல் படையினர் திறம்பட பணியாற்றிட, ஒளி பிரதிபலிப்பு பொதியுறைகள் அதாவது, Reflective jackets; ஒளிர் விளக்குகள் அதாவது, Baton Lights மற்றும் கம்பி ரம்ப இயந்திரங்கள் அதாவது Wire Saw Machines ஆகியன 5 லட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும்.

82. ஊர்க்காவல் படையினர் பணியில் இருக்கும் போது மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு, ஒரு தடவை மட்டுமே வழங்கப்படும் ஒட்டுமொத்த மானியம் One time lumpsum grant 3,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாகவும், பணியில் இருக்கும் போது காயமடைந்தாலோ அல்லது ஊனமடைந்தாலோ

அவர்களுக்கு, ஒரு தடவை மட்டுமே வழங்கப்படும் ஒட்டுமொத்த மானியம் One time lumpsum grant 1,500 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகவும்; பணியில் இருக்கும் போது பாதிப்புக்குள்ளானால் ஒரு தடவை மட்டுமே வழங்கப்படும் ஒட்டுமொத்த மானியம் One time lumpsum grant 1,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும், பணியில் இருக்கும் போது மரணமடைந்த அல்லது ஊனமுற்றவரின் இரண்டு குழந்தைகளுக்கு அவர்களின் பள்ளிப் படிப்பிற்காக தேவைப்படும் புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்கள் வாங்குவதற்கு, ஒரு தடவை மட்டுமே வழங்கப்படும் ஒட்டுமொத்த மானியம் One time lumpsum grant) 300 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும், பணியில் இருக்கும் போது மரணமடைந்த அல்லது ஊனமுற்றவரின் இரண்டு குழந்தைகளுக்கு அவர்களின் கல்லூரிப் படிப்பிற்காக, தேவைப்படும் புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்கள் வாங்குவதற்கு, ஒரு தடவை மட்டுமே வழங்கப்படும் ஒட்டுமொத்த மானியம் One time lumpsum grant 1,600 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாகவும், பணியில் இருக்கும் போது மரணமடைந்த அல்லது ஊனமுற்றவரின் மகளின் திருமணத்திற்கு, ஒரு தடவை மட்டுமே வழங்கப்படும் ஒட்டுமொத்த மானியம் One time lumpsum grant 2,500 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாகவும், பணியில் இருக்கும் போது மரணமடைந்த அல்லது ஊனமுற்றவரின் மனைவி அல்லது அவர்களின் குடும்பத்தினரின் சுய வேலை வாய்ப்புக்காக இயந்திரங்கள் வாங்குவதற்கு, ஒரு தடவை மட்டுமே வழங்கப்படும் ஒட்டுமொத்த மானியம் (One time lumpsum grant) 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

*****